# திருக்குறள் - அறத்துப்பால் உணர்த்தும் அறக்கருத்துக்கள்

**முனைவர் வெ.பிரேமலதா,**
**உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,**
**புனிதசிலுவைதன்னாட்சிக் கல்லூரி**
**திருச்சிராப்பள்ளி – 620 002**
**darshansarvesh@gmail.com**

11

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதன் மனிதனாக வாழ, மனிதன் மனிதனுக்கு கூறிய அறிவுரை நூல் தான் திருக்குறளாகும். இது நாடு, மொழி, இனம், சமயம் கடந்த எக்காலத்திற்கு பொருந்துவனாய் அமைந்ததால் திருக்குறள் உலகப்பொதுமறை என்று அழைக்கபப்படுகின்றது. மனிதன் தன் வாழ்க்கையை உயர்ந்ததாகவும், இனியதாகவும் ஆக்கிக் கொள்ளப் பயன்படும் ஒரு பண்பாட்டு வழிகாட்டியாகவும் திருக்குறள் விளங்குகின்றது. அறம், பொருள், இன்பம் என்னும் உறுதிப்பொருள் மூன்றனையும் உணர்த்தும் ஒரு அறநூலாகத் திகழ்கின்றது. திருக்குறள் இம் மூன்றனையும் கூறுதலின் முப்பால் என்னும் பெயரையும் பெற்றுள்ளது. இத்துணை சிறப்புப் பெற்ற திருக்குறளில் அறத்துப்பால் உணர்த்தும் அறக்கருத்துக்களை இக்கட்டுரையில் காண்போம்.

**திறவுச்சொற்கள்:**

| | | |
|---|---|---|
| **மாசிலன்** | - | **குற்றமில்லாதவன்,** |
| **அழுக்காறு** | - | **பொறாமை** |
| **அவா** | - | **ஆசை** |
| **வெகுளி** | - | **கோபம்** |
| **இன்னாச்சொல் -** | **கடுஞ்சொல்** | |
| **ஓம்புதல்** | - | **காத்தல்** |
| **இன்சொல்** | - | **இனியசொல்** |
| **வாய்மை** | - | **உண்மை** |

**முன்னுரை**

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்களை பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள் என்கின்றோம். இவ்விலக்கியங்கள் இருண்ட காலத்தில் நிலவிய சூழ்நிலையை உணர்த்தும் விதமாக அமைந்துள்ளது. இத்தகைய இலக்கியங்களை நீதி இலக்கியங்கள் என்கின்றோம். நீதி நூல்களில் ஒன்றான திருக்குறளில் வள்ளுவர் கூறும் அறத்தின் பொருள், விளக்கம், பண்பு, பயன் போன்றவற்றை ஆராயும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

**அறம்**

அறம் என்பது ஒரு மனிதன் தனக்குள் உருவாக்கிக் கொள்ளும் நெறிகள். இறுதியாக வகுத்துக் கொண்ட நடத்தைகள். செய்யக் கூடியவை, செய்யக் கூடாதவை, செய்தே ஆகவேண்டியவை அடங்கிய ஒரு வழிகாட்டித்தொகை என்பதே அறம். அறம் அல்லது ஒழுக்கநெறி என்பது, ஒருவர் சமூகத்தில் எவ்வாறு நடக்க வேண்டும் என்பது தொடர்பான பார்வைகளை குறிக்கிறது. ஒழுக்கநெறிகள் எல்லாச் சமுதாயங்களிலுமே ஒன்றுபோல இருப்பதில்லை. காலம், நம்பிக்கைகள், பண்பாடு என்பவற்றைப் பொறுத்து இவை வேறுபடுகின்றன. ஒழுக்கநெறிகள், சமூகம், மெய்யியல், சமயம், தனிமனிதரின் மனசாட்சி போன்றவற்றால் வரையறுக்கப்படுகின்றன.

அறத்தின் வழியில் வாராத பொருளும் இன்பமும் பழிக்கப்பெறும். இதனை,

**“சிறப்புடை மரபிற் பொருள் மின்பமும்**
**அறத்து வழிப்படுஉந் தோற்றம் போல” 1 (புறம்-31)**

என்னும்பாடல்அடிகள்விளக்குகின்றன.

**“அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்**
**புறத்த புகழும் இல”2 (குறள்-39)**

என்னும் குறளில் அறவழியில் வாழ்வதால் வரும் பயனே இன்பம். பிறவழிகளில் வரும் பயன் இன்பம் இல்லாததும் புகழற்றுதும் ஆகும்.; சேர்க்கும் திறம் அறிந்து தீமையற்ற முறையில் சேர்த்த பொருள் ஒருவனுக்கு அறத்தையும் இன்பத்தையும் கொடுக்கும்.

**அறம் என்பதன் பொருள்**

அறம் என்ற சொல்லுக்கு தர்மம், கடமை, தியானம், புண்ணியம், ஞானம், நல்வினை, தருமதேவதை, அறக்கடவுள், அறச்சாலை, நோன்பு என்ற பொருளை அகராதி உரைக்கின்றது. அதோடு இந்து சமயக் கருத்தாக்கவியலில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கும் நாற்பொருள்கள் அல்லது நாற்புருடார்த்தம் என்றும் கூறப்படுகிறது. நிலையான உண்மையுடனும், உணர்வுகளுடனும் இருப்பது தான் அறம் என்றும் சொல்லப்படுகிறது. மேலும் அறம் என்பது ஒழுக்கத்தையும் குறிக்கும். அதோடு காலம், பண்பாடுகள் இவற்றை கொண்டு அறமானது வேறுபடுகின்றது. அறம் என்பது ஒருவர் சமுதாயத்தில் எவ்வாறு ஒழுக்க முறைகளுடன் நடக்க வேண்டும் என்பதை பற்றிக் கூறும் ஒரு நடத்தை ஆகும். இவை நல்லவை, தீயவை என இரண்டு தொடர்புகளையும் கொண்டுள்ளது, தமிழ் நூல்களில் உள்ள வாழ்த்து பாடல்களிலும், திருக்குறளிலும் இந்த அறமானது இடம்பெற்றுள்ளது.

அறம் என்ற சொல்லினை அறு ை அம் எனப் பகுத்து அறு என்பதற்கு அறுதி வரையறை என்றும், வாழ்க்கையில் மேற்கொள்ளத்தக்க கொள்கைகள் எனப் பொருள் கூறுவர். அறு என்னும் பகுதிக்குத் தீமையை அறுப்பது என்றும் பொருள் ஆகும். ஆனால், திருவள்ளுவர் அறத்துப்பாலில் அறன் வலியுறுத்தல் என்று ஓர் அதிகாரம் கூறியுள்ளார். அதன்கண் ஈதல், இனியவை கூறுதல் போன்ற அறச்செயல்களைக் குறிப்பிடாமல் பொதுவாக அறத்தைக்

குறிப்பிட்டுள்ளார். அவ்வதிகாரத்தில்தான்;

**“மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்**
**ஆகுல நீர பிற”3 (குறள் - 34)**

என்னும் குறளில் மனத்தில் குற்றமில்லாமல் இருந்தலே நல்ல அறமாகும் மற்றவை அனைத்தும் வெளி வேடங்களே என்கிறார் திருவள்ளுவர்.

**“அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்”4 (குறள் - 35)**

என்னும் குறளில் பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய நான்கையும் நீக்கிச் செய்கின்ற செயலே அறச்செயல் என்று கூறுவர். ஆனால் அறன் வலியுறுத்தலில் வரும் இது போன்ற குறள்களைக் காணும் போது, தீமை நீக்கமே அறம் என்னும் சொல்லுக்குப் பொருளாகும்.

**அறம் என்பதன் விளக்கம்**

அறம் என்பதற்கான சில சிறப்பான வரையறைகளைப் பற்றியும், அவை எவ்வாறு ஒரு பொருளில் இடம் பெற்று வருகின்றது

- **அன்பாய் இருப்பது அறம்**
- **இனிமையாய்ப் பேசுவது அறம்**
- **கடுஞ்சொற்களைத் தவிர்ப்பது அறம்**
- **நல்லதையே நாடுவது அறம்**
- **தூய துறவியரைப் பேணுவது அறம்**
- **மானத்துடன் வாழ்வது அறம்**
- **அருள் வழியில் ஆண்டவனை உணர்த்துவது அறம்**
- **மனதில் குற்றமற்று இருப்பது அறம்**
- **பொய்யைத் தவிர்ப்பது அறம்**
- **சினத்தைத் தவிர்ப்பது அறம்**
- **பொறாமை உணர்ச்சியைத் தவிர்ப்பது அறம்**
- **பிறருக்குக் கெடுதல் செய்யாமை அறம்**
- **பிறருடன் பகிர்ந்து உண்பது அறம்**
- **பிற உயிர்களைக் கொல்லாமை அறம்**
- **தீமையில்லாத வழியில் பொருளீட்டுவது அறம்**
- **இல்லற வாழ்வில் ஈடுபடுவது அறம்**
- **அறநூல்களைக் கற்று அடக்கமுடன் இருப்பது அறம்**

**குறள் பகுப்பில் அறம்**

குறளின் பெரும்பிரிவுகளான பால் பகுப்பில் அமைந்த அறம், பொருள், காமம் என்பனவற்றுள் அறம் வழக்கமாக முதலில் வைத்துப் பேசப்படுகிறது. இயல்கள் என்று அழைக்கப்படும் நான்கு சிறு பகுதிகளாக முதலில் பாயிரம், அடுத்து இல்லறம், துறவறம் கடைசியில் ஊழ் என அறத்துப்பால் உள்ளதாக திருவள்ளுவமாலை மூலமும் உரைசெய்தவர்கள் மூலமும் அறியமுடிகின்றது.

பாயிரமான முதல் பகுதி கடவுள் வாழ்த்து, வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல் எனும் நான்கு அதிகாரங்களாக அமைந்து குறளுக்கு ஒரு முன்னுரையாக வருகிறது. இந்த நான்கையும்

**"கொடிநிலை கந்தழி வள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே"5 (தொல்.புற-33)**

எனத் தொல்காப்பியம் குறிப்பிடும் கடவுள் வாழ்த்து, கொடிநிலை, கந்தழி, வள்ளி ஆகிய வாழ்த்து நிலைகளோடு தொடர்புப்படுத்தி இவற்றை மனதில் வைத்தே வள்ளுவர் பாயிரம் படைத்தார் எனக்குறிப்பிடலாம்.

பாயிரத்தை அடுத்து இல்லறம் சொல்லப்பட்டுள்ளது. இல்லறத்தில் இருப்பவர்கள், வீட்டிலும் வெளியே சமுதாயத்திலும் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்களும், கடமைகளும், செய்ய வேண்டிய செயல்களாகவும், செய்யக்கூடாதவையாகவும் பிரித்துக் காட்டப்பட்டு, 200 குறட்பாக்களாக இல்லறவியலில் இடம்பெற்றுள்ளன. அடுத்துத் துறவறவியலில் மனித வாழ்வின் முதிர்ந்த நிலை விளக்கப்படுகிறது. முதிர்நிலையாகிய துறவறத்தில் நிலையாமை கூறி, அருளுடைமை, கொல்லாமை, வாய்மை, அவா அறுத்தல் ஆகிய நிலைத்த அறங்களும் கூறப்பட்டுள்ளன.

மேலும் துறவறவியலில் சமயங்களின் பொய்ம்மையான கொள்கைகளுக்கும் போலித்துறவிற்கும் எதிரான கருத்துக்களையும் வள்ளுவர் பதிவு செய்துள்ளார். இல்லறத்தின் தொடர்ச்சியே துறவறம்; இல்லறத்திற்குள்ளேயும் துறவறத்தைப் பயிற்சி செய்யலாம். துறவறமென்பது வாழ்க்கையை வெறுத்து ஓடுவது அன்று. இல்லறத்திலும் மேம்பட்ட விரிந்து பரந்த அன்பு வழியைப் பேணுவதென்பதும் வள்ளுவர் எண்ணமாதலின் அவர் துறவறவியலில் வாழ்வை வெறுத்தலையும் உலகை மறுத்தலையும் பேசவில்லை என்பது குறிக்கத்தக்கது.

இறுதிச் சிறுபகுதி ஊழைப் பற்றிச் சொல்லும் ஓரே ஒரு அதிகாரம் கொண்டது. ஊழ் என்ற சொல் முறை அல்லது இயற்கையின் செயல் எனப் பொருள்படும். ஊழிற்பெருவலி யாவுள? என்று கேட்டு ஊழின் வலிமையை நமக்கு உணர்த்துகிறார் வள்ளுவர். அறத்துப்பாலின் இறுதியில் வரும் ஊழ் அதிகாரம் உயிர்களால் ஆவது எதுவுமில்லை, நடப்பது நடந்தே தீரும் என்ற முடிவோடு நிறைவு பெறுகின்றது.

இவ்வாறாகப்பாயிரம் 4 அதிகாரங்களையும் இல்லறம் 20 அதிகாரங்களையும் துறவறம் 13 அதிகாரங்களையும் கடைசியாக ஊழ் 1 அதிகாரத்தையும் கொண்டு அறத்துப்பால் மொத்தமாக 38 அதிகாரங்களில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**அறத்தின் பண்புகள்**

அறம் என்பது பல நற்பண்புகளை அகத்தடக்கிய ஒரு சொல்லாக கருதப்படுவதை,

**"அகத் தானாம் இன்சொலினதே அறம் "6 (குறள் - 93)**

**"அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலான்**
**பெண்மை நயவா தவன் "7 (குறள் - 147)**

**"அறவினை யாதெனிற் கொல்லாமை"8 (குறள் - 321)**

மேற்கண்ட குறள்கள் எடுத்தியம்புகின்றன. இனியவை கூறலையும், பிறர் மனை விழையாமையையும், கொல்லாமையையும் அறமெனக் குறிப்பிடுகின்றது.

அறம் என்பதற்கு இலக்கணம் கூற வந்த பரிமேலழகர் மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும் விலக்கியன ஒழிதலுமாம் என்பர். எனவே, தீமைகளை விலக்கி, நல்லன செய்தலே அறம் என்பதை

**“நல்லது செய்தல் ஆற்றீராயீனும்**
**அல்லது செய்தல் ஓம்புமின் அதுதான்**
**எல்லாரும் உவப்ப தன்றியும்**
**நல்லாற்றுப் படுஉம் நெறியுமா ரதுவே”9 (புறம் - 195)**

என்னும் புறநானூற்றுப்பாடல் ‘நல்லது செய்யா விடினும் தீயது செய்தலாகாது’ என்று அறத்தை எடுத்துரைக்கின்றது.

நல்லது செய்தல் ஆற்றீராயினும் என்பதிலுள்ள உண்மை நல்லது செய்ய வேண்டியதான இன்றியமையாமையைச் சுட்டும். தீமையை விலக்குதல் மட்டுமன்றி நல்லது செய்தலும் அறத்தின் பாற்படும். வயலிலுள்ள பயிர் செழிக்க வேண்டும் எனின் அதன் கண் உள்ள களையை களைந்து எறிதல் வேண்டும். அதுபோல மனத்தில் அறம் தழைக்க வேண்டும் எனின், அதில் உள்ள மாசு மறுக்களை அகற்றல் வேண்டும். திருக்குறளில் வரும் அறத்துப்பாலில் வரும் இன்னா செய்யாமை, கள்ளாமை, பயனிலசொல்லாமை, புறங்கூறாமை, வெகுளாமை, வெஃகாமை முதலிய அதிகாரங்கள் இடம் பெறுகின்றன. மேலும், செய்தல் ஆகாது என்ற அடிப்படையில் விலக்கக்கூடிய அறங்களை பற்றியும் கூறுகின்றன. இனியவை கூறல், ஈகை, செய்நன்றியறிதல், விருந்தோம்பல், நடுவுநிலைமை முதலிய அதிகாரங்கள் நல்லது செய்தல் வேண்டும் என்ற அடிப்படையில் (செயலறங்கள்) கூறுகின்றன.

அறத்திற்கு அடிப்படையாய் விளங்குவது அருளாகும். இதில் திருமாலின் பல பண்புகளைக் கூற வந்த பரிபாடற் புலவர் கடுவனிள வெயினனார் இதனை,

**“அறத்தினுள் அன்பு நீ**
**மறத்தினுள் மைந்து நீ”10 (பரி.பா - 65)**

என்னும் பாடல் அடியில் அறத்தினுள் அன்பு நீ என்று கூறுதலின் பல்வகை அறப்பண்புகளுக்கும், அன்பே தலையாயது என்பதின் பொருளாகும். எனவே, அன்பின் முதிர்ச்சியாகிய அருள் என்னும் அறத்தின் அடிப்படையில்தான் வேறு பல அறங்களும் தோன்றுகின்றன.

**“மெல்லென் அருளிற் பிறக்கும் அறநெறி”11 (நான்.கடி -7)**
**“சீர்சான்ற மென்கண் பெருகின் அறம் பெருகும் ”12 (நான்.கடி -93)**

என்னும் நான்மணிக்கடிகைப் பாடல் அடிகள் அறத்தைப்பற்றி விளக்குகின்றன.

**“அறனும் அருளுடையான் கண்ணதே யாகும்**
**நெகிழ்ந்த அருனினா னாகும் ”13 (சிறு.மூலம் - 3)**

என்னும் சிறுபஞ்சமூல அடிகளும் இக்கருத்தை வலியுறுத்தும்.

ஒருவர் மற்றொருவரை நம்புதலால்தான் உலகம் இயங்குகிறது. ஒருவர் பிறரிடம் பேசும்போது, வாய்மை மொழியாது அன்பின்றி வஞ்சகமாகப் பொய்மொழியின் அது காரணமாகப் பல தீமைகள் நிகழும்.

ஆதலால் தான் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் பொய்மை கடிந்து வாய்மையினை வலியுறுத்துவர் வள்ளுவர்.

**"பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று"14 (குறள் - 297)**

என்கிற குறளில் பொய்யாமை பொய்த்துப் போகாமல் வாழ முடியுமானால் பிற அறங்களைச் செய்யாதிருந்தாலும் நன்மை உண்டாகும் என்று விளக்குகின்றார்.

**அறத்தின் பயன்**

இல்வாழ்க்கைதான் அறம்;. இல்லறத்திலிருந்து வாழ்வாங்கு வாழ்பவன் தெய்வத்துக்கு ஒப்பாக கருதப்படுவான். இல்வாழ்வில் நின்று ஒழுகுபவர்கள், ஒப்புரவறிந்து, ஈகையால் புகழ் பெற்று, அதனையும் கடந்து அருள் முதலிய விரதங்களை மேற்கொண்டு, தவத்தால் நீங்கப் பெற்று, நிலையாமையை உணர்ந்து, துறவு நிலை மேற்கொண்டு, எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு என்றுணர்ந்து, அம்மெய்யறிவால் துன்பத்துள் துன்பம் விளைவிக்கும் அவாவை அழித்து, சிறப்பெனும் செம்பொருள் காண்கிறார்கள். அற ஒழுக்கத்தின் பயன் சிறப்பும் செல்வமும் ஆகும். இதுவே அறம் என்பதற்கு அறத்துப்பால் தரும் விளக்கமாகும்.

**அறத்தின் வழி மனத்தூய்மை**

**"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்**
**தொகுத்தவற்றுள் எல்லாம் தலை"15 (குறள்- 322)**

என்னும் குறளில் இருப்பதைப் பகிர்ந்து தானும் உண்டு பல உயிர்களையும் காத்தல் அறநூலோர் தொகுத்துக் கூறிய அறங்களில் எல்லாம் முதன்மையானது. எனவே உயிரோம்பலைச் சிறந்த அறமாக வள்ளுவர் கூறுகின்றார். எச்செயல் செய்தாலும், எம்மொழி பேசினாலும் அடிப்படையான மனம் தூய்மையாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் தூய மனத்தின்வழி வரும் மொழியும் செயலும் தூயனவாக இருக்கும். வினைத்தூய்மை, மொழித் தூய்மைகளைக் காப்பதற்காகத்தான் மனத்தூய்மையைப் பெரிதும் வற்புறுத்துகின்றார் வள்ளுவர். ஆகவே, மனத்தை எவ்வகை மாசும் படியாமல் காக்க வேண்டும். இல்லறமாயினும், துறவறமாயினும் திருவள்ளுவர் மனத்தூய்மையையே வற்புறுத்துகின்றார். இதனை,

**"மனத்துக்கண் மாசிலனாதல் " (குறள் -36)**
**"உள்ளத்தால் பொய்யா தொழுகின் " (குறள் -294)**
**"தன்னெஞ்சறிவது பொய்யற்க" (குறள் -293)**
**"மனத்தொடு வாய்மை மொழியின் " (குறள் - 295)**
**"மனத்தது மாசாக மாண்டார் நீராடி" (குறள் - 278)**

போன்ற பல குறள்களால் வள்ளுவர் மனமாசு அடையக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றார்.

**தொகுப்புரை**

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள், திருக்குறள் தனக்கென ஒரு சிறப்பிடத்தைப் பெற்றுக்கொண்டு உலகமொழிகளில் அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட நூல் என்ற பெருமையோடு வலம்வருகின்றது.

அதற்கு முக்கியகாரணமாகத் திகழ்வது வள்ளுவர் தம் குறளில் கூறிய அறக்கருத்துக்கள் ஆகும். ஒரு மனிதன் தன் வாழ்க்கையை முழுமையான முறையில் வாழவேண்டுமானால் அறஉணர்வுடன் வாழ வேண்டும். அறத்துப்பாலில் உள்ள அறக்கருத்துக்கள் தனி மனிதனின் வாழ்வை மேன்மையடையச் செய்யும். அறத்துப்பால் உணர்த்தும் அறிவுரைகளைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது, மனமாசின்றி அன்பு அடிப்படையில் பகுத்துண்டு, பல்லுயிரோம்பி, தமக்குரிய வாழ்வியற் கடமைகளை நன்றாற்றி, வாய்மைமொழிந்து, அறத்துப்பாலில் கடவுள் உண்மை கூறப்பட்டுச் சமயச் சார்பற்ற அறம் போதிக்கப்படுகிறது. அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்று சாற்றப்படுகிறது. அன்புநெறி எல்லா இடங்களிலும் வலியுறுத்தப்படுகிறது. செயல்நிலை அறமே பெரிதும் வற்புறுத்தப்படுகிறது. பரந்துபட்ட பொறுமையுணர்வு அறிவுறுத்தப்படுகின்றது.

**சான்றெண்விளக்கம்**

1. ச.வே.சுப்பிரமணியன், சங்கஇலக்கியம் எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2010, ப.543
2. நாமக்கல்கவிஞர் (உரை.,), பதினெண்கீழ்க்கணக்குநூல்கள் மூலமும் தெளிவுரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2022, ப.33
3. மேலது, ப.32
4. மேலது, ப.32
5. இளம்பூரணர் (உரை.,), தொல்காப்பியம், பொருளதிகாரம், சாரதாபதிப்பகம், முதற்பதிப்பு, 2005, ப.138
6. நாமக்கல்கவிஞர் (உரை.,), மு.நூ, ப.44
7. மேலது, ப.55
8. மேலது, ப.90
9. ச.வே.சுப்பிரமணியன், மு.நூ, ப.705
10. மேலது, ப.188
11. மாணிக்கம்(உரை.,),பதினெண்கீழ்க்கணக்குநூல்கள் மூலமும் தெளிவுரையும், வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு, 2022, ப.9
12. மேலது, ப.35
13. மேலது, ப.330
14. நாமக்கல்கவிஞர் (உரை.,), மு.நூ, ப.85
15. மேலது, ப.90

**துணைநூற்பட்டியல்**

1.இளம்பூரணர் உரை., - தொல்காப்பியம் - பொருளதிகாரம்,
சாரதா பதிப்பகம்,
ஜி-4, சாந்தி அடுக்ககம்,

இராயப்பேட்டை,
சென்னை - 14,
முதற்பதிப்பு - 2005

2.சுப்பிரமணியன் ச.வே. - சங்கஇலக்கியம் முலமும் உரையும்,
மாணிக்கவாசகர் பதிப்பகம்,
31,சிங்கர்தெரு, பாரிமுனை,
சென்னை - 108,
முதற்பதிப்பு - 2010

3.நாமக்கல் கவிஞர்(உரை.,) - பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள்
மூலமும் உரையும்,
வர்த்தமானன் பதிப்பகம்,
21, இராமகிருஷ்ணா தெரு,
தியாகராயநகர், சென்னை - 17
முதற்பதிப்பு - 2022

4.மாணிக்கம் (உரை.,) - பதிணென்கீழ்க்கணக்கு நூல்கள்
மூலமும் உரையும்,
வர்த்தமானன் பதிப்பகம்,
21, இராமகிருஷ்ணா தெரு,
தியாகராயநகர், சென்னை - 17
முதற்பதிப்பு - 2022